செ.லெ.எண் - 442 **செய்திக் குறிப்பு** நாள் - 13-07-2016

**2016 ல் நடைபெறவுள்ள தமிழ் நாடு ஊரகப் பகுதி மாணவர்களுக்கான திறனாய்வுத் தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்கான அறிவுரைகள்**

**தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்கான தகுதிகள் :**

1. அரசு ஆணை (நிலை) எண்.960, கல்வி (இ2) துறை, நாள் 11.10.91ன் படி ஊரகப் பகுதிகளில் (அதாவது கிராமப்புற பஞ்சாயத்து, நகர பஞ்சாயத்து மற்றும் டவுன்சிப்), அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் 2016–2017 கல்வியாண்டில் தொடர்ந்து 9–ம் வகுப்பில் பயிலும் மாணவ,மாணவியர் இத்திறனாய்வுத் தேர்வு எழுதுவதற்கு தகுதி படைத்தவராவார்கள்.

2. இத்தேர்விற்கு விண்ணப்பிக்கும் தேர்வரின் பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.1,00,000/–க்கு மிகாமல் உள்ளது என்பதற்கு வருவாய்த் துறையினரிடமிருந்து வருமான சான்று பெற்று அளித்தல் வேண்டும்.

3. தேர்விற்கு விண்ணப்பிக்கும் மாணவ, மாணவியர்கள் தேர்வுக்கான கட்டணம் ரூ.5/– சேவைக் கட்டணம் ரூ.5/– மொத்தமாக ரூ.10/– வீதம் **Online மூலம் பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களுடன்** பணமாக பள்ளி தலைமையாசிரியர் மூலம் உரிய முதன்மைக் கல்வி அலுவலரிடம் செலுத்துதல் வேண்டும். (www.tndge.in)

தேர்விற்கு விண்ணப்பிக்க கடைசி நாள் 08.08.2016 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதற்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்ந்தெடுக்கப்படும் 100 நபர்களுக்கு (50 மாணவியர்கள் + 50 மாணவர்கள்) 9ம் வகுப்பு முதல் 12 ம் வகுப்பு வரை படிக்கும் காலத்திற்கு படிப்புதவித் தொகை ஆண்டு தோறும் ரூ.1000/– வீதம் வழங்கப்படும்.

குறிப்பு: நகராட்சி மற்றும் மாநகராட்சி பகுதிகளில் படிக்கும் மாணவ/மாணவிகள் இத்தேர்விற்கு விண்ணப்பிக்க இயலாது.

ஒம்/–
இயக்குநர்

Mrs. Vasundra devi
Exam director
(அரசு தேர்வு)

வெளியீடு:
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
நாகர்கோவில்